**சிறுநில உடைமையாளர் பெருந்தோட்டங்கள் தொழில்முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (எஸ்பிஈஎன்டிபீ) - 2013**

சிறு நில உடைமையாளர் பெருந்தோட்டங்கள் தொழில்முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்திற்கும் (ஐஎப்ஏடீ) இடையே கைச்சாத்திடப்பட்ட 2007 மே 08 ஆந் திகதிய 712-எல்கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் V ஆம் உறுப்புரையின் 02(அ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளிப்பு, காலம் என்பன

சிறு நில உடைமையாளர் பெருந்தோட்டங்கள் தொழில் முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சு நிகழ்ச்சித் திட்டத்தின் அமுலாக்கல் முகவராகும். நலன்பெறுனர்களின் நிறுவகரீதியான இயலுமையினையும் சமரசம் செய்தல் நுட்பங்களையும் வலுப்படுத்துதல், சிறுதோட்ட நில உடைமை தேயிலை மற்றும் இறப்பர் செய்கையாளர்களின் காணிக் குத்தகை நிலைமையினை மேம்படுத்துதல், முன்னேற்றகரமான அறுவடைக்குப் பிந்திய கையாளலின் ஊடாக உற்பத்தியாளர்களின் இலாபத்தினை அதிகரித்தல், அவர்களின் உற்பத்திப் பொருட்களினை களஞ்சியப்படுத்தல், செயல்முறைப்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தல், கிராமிய நீதி மற்றும் கடன் சேவைகளை அபிவிருத்தி செய்தலும் விரிவுபடுத்துதலும், பெண்கள் தங்களின் வாழ்க்கை நிலைமையினையும் மேம்படுத்துதலினையும் தங்களின் வறுமையினைக் குறைப்பதனையும் உறுதிப்படுத்துதல் என்பனவே நிகழ்ச்சித்திட்டத்தின் குறிக்கோள்களாகும்.

கடன் உடன்படிக்கையின் பிரகாரம் நிகழ்ச்சித்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் யூஎஸ் டொலர் 40 மில்லியனாக உள்ளதுடன் இதில் யூஎஸ் டொலர் 22.5 மில்லியன், யூஎஸ் டொலர் 3.8 மில்லியன், யூஎஸ் டொலர் 5.5 மில்லியன், யூஎஸ் டொலர் 5.2 மில்லியன், யூஎஸ் டொலர் 2 மில்லியன் மற்றும் யூஎஸ் டொலர் 1 மில்லியன் என்பன முறையே விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம், இலங்கை அரசாங்கம், யூஎஸ்எயிட், வெலஸ்ஸ இறப்பர் கம்பனி,

பங்குபற்றும் நிதி நிறுவனங்கள் மற்றும் நலன்பெறுனர் பங்களிப்பு என்பவற்றின் மூலம் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. யூஎஸ்எயிட், வெலஸ்ஸ இறப்பர் கம்பனி என்பன நிகழ்ச்சித்திட்டத்திற்கு நிதியளிக்காதிருந்ததனாலும் பங்குபற்றும் நிதி நிறுவனங்களின் பங்களிப்பு யூஎஸ் டொலர் 2 மில்லியனிலிருந்து யூஎஸ் டொலர் 0.7 மில்லியன் வரையும் குறைக்கப்பட்டதனாலும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் அறிவுறுத்தலின் படி நிகழ்ச்சித்திட்டத்தின் மேற்கூறப்பட்ட மொத்த கிரய மதிப்பீட்டினைத் திருத்தியமைப்பதற்குப் பிரேரிக்கப்பட்டிருந்தது. ஆகவே நிகழ்ச்சித்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் யூஎஸ் டொலர் 28 மில்லியனுக்கு குறைக்கப்பட்டிருந்தது. நிகழ்ச்சித்திட்டம் அதனது நடவடிக்கைகளை 2007 நவம்பர் 06 ஆந் திகதி ஆரம்பித்திருந்ததுடன் 7 ஆண்டுகள் காலத்திற்குள் பூர்த்தி செய்தவற்குப் பட்டியலபடுத்தப்பட்டிருந்தது.

## 1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்ப்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக் கூடிய பிறழ் கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவுசெய்து பயன்படுத்துவதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்காய்வின் நோக்கேல்லையும் அபிப்பிராயத்திற்கான அடிப்படையும்

என்னுடைய கணக்காய்வுப் பரிசோதனையை அடிப்படையாகக் கொண்டு இந்நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல்வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த

பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாக இருந்தது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினதும், வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் முகாமைத்துவத்தினால் கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளையும் குறிப்பிடத்தக்க மதீப்பீடுகளினையும் அவற்றின் ஒட்டுமொத்த முன்வைத்தலையும் மதிப்பாய்வு செய்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு நோக்கத்திற்கு அவசியமானவை என எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்குமேற்ப போதிய தகவல்கள் மற்றும் விளக்கங்களை நான் பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென நான் நம்புகின்றேன். அந்தப் பரிசோதனையில் பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதென தென்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் கணக்குப் பதிவேடுகள் என்பவற்றின் அத்தகைய செவ்வைகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(அ) நிகழ்ச்சித்திட்டத்தின் முகாமைத்துவம் தொடர்பாகத் திருப்திகரமான கட்டுப்பாட்டையும் நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் உறுதி செய்வதன் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவாக இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவரின் நிதிகளிலிருந்தான நிகழ்ச்சித்திட்டத்தின் செலவினம், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம், நிகழ்ச்சித்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து எழுந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டக்கூடியவாறு தொடர்ச்சியான அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் குறித்துரைக்கப்பட்ட கடன் உடன்படிக்கைகயின் அளவீடுகளுக்கு இணங்கியிருந்தனவா என்பதும்

(ஈ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும், உபகரணங்கள் என்பன நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா, என்பதும்,

(உ) நிகழ்ச்சித்திட்டத்தினை அமுல்படுத்துவதற்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க, செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) கட்டுநிதி நிதியக் கணக்கிற்கான ஆரம்ப வைப்பு, அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள்நிரப்பல்கள் நிகழ்ச்சித்திட்டத்தினால் பேணப்பட்ட ஏடுகளிலும் பதிவேடுகளிலும் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்தப்பட்டுள்ளனவா என்பதுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியில் உள்ளவாறான இலங்கை மத்தியின் (சீபீஎஸ்எல்) கணக்கேடுகளுடன் திருப்திகரமாகக் கணக்கிணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமாக இருந்தனவா என்பதும்,

(ஐ) எனது கடந்த ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை சீராக்குவதற்கு முகாமைத்துவத்தினால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஒ) கடன் உடன்படிக்கையில் விதந்துரைக்கப்பட்ட நிதியளிப்பு உடன்பாடுகளுடன் இணங்கப்பட்டுள்ளனவா என்பதும் ஆகும்.

## 3. அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக்கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, இந்த அறிக்கையின் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து,

(அ) நிகழ்ச்சித்திட்டமானது 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக் கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிகழ்ச்சித்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றது என்றும்,

(ஆ) எந்த நோக்கங்களுக்காக நிதி ஏற்பாடு செய்யப்பட்டனவோ அந்த நோக்கங்களுக்காகவே அவை பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்

(இ) 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கட்டுநிதி நிதியக் கணக்கிலிருந்து பற்றல்களும் அக்கணக்கிற்கான மீள்நிரப்பல்களும் நிகழ்ச்சித்திட்டத்தினால் பேணப்பட்ட ஏடுகளிலும் பதிவேடுகளிலும் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியில் உள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாகக் கணக்கிணக்கம் செய்யப்பட்டிருந்தன என்றும்

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் மீது (SOEs) அவை கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளிற்கிணங்க மீளளிப்பு விண்ணப்பங்களிற்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கைகொள்ள முடியுமென்றும்,

(உ) எனது கடந்த ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை சீராக்குவதற்கு முகாமைத்துவத்தினால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும்,

(ஊ) கடன் உடன்படிக்கையில் முன்வைக்கப்பட்ட நிதிசார் நிபந்தனைகளுடன் இணங்கப்பட்டிருந்தன என்றும்,

## 4. நிதிக்கூற்றுக்கள்

### 4.1 நிதிசார் செயலாற்றல்

நிதிக்கூற்றுக்கள் மற்றும் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்த தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிகழ்ச்சித்திட்டத்தின் செலவினம் ரூபா 503,736,264 ஆக இருந்ததுடன் அத்திகதியில் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 1,759,899,896 ஆக இருந்தது. மீளாய்வாண்டிற்கான செலவினம், முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பு கீழே தரப்படுகின்றது.

| செலவினத்தின் வகை | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் | | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | 2013 | 2012 | |
| | ரூபா | ரூபா | ரூபா |
| சிவில் வேலைகள் | 15,382,670 | 66,354,327 | 183,221,239 |
| மோட்டார் வாகனங்கள் | - | - | 32,377,365 |
| உபகரணங்களும் பொருட்களும் | 3,707,482 | 3,031,823 | 19,585,215 |
| பயிற்சியும் செயலமர்வும் | 15,047,179 | 10,406,602 | 43,456,332 |
| தொழில்நுட்ப உதவிகளும் கற்கைகளும் | 1,685,778 | 5,853,510 | 16,945,227 |
| சேவை வழங்குனர் ஒப்பந்தங்கள் | 8,486,292 | 5,359,273 | 20,560,787 |
| விவசாய உள்ளீடுகள் | 68,616,617 | 82,346,464 | 336,709,110 |
| உதவு தொகைகளும் இணைத்தல் மானியங்களும் | 121,962,641 | 130,701,016 | 464,894,001 |
| கடன்கள் | 164,796,264 | 57,429,736 | 272,536,000 |
| சம்பளங்களும் படிகளும் | 29,504,040 | 27,476,219 | 146,456,988 |
| செயற்பாடும் பராமரிப்பும் | 14,036,072 | 13,999,290 | 81,526,182 |
| நலன்பெறுனர் பங்களிப்புகள் | 19,312,163 | 21,265,461 | 77,747,450 |
| பங்குபற்றும் நிதி நிறுவனங்களின் பங்களிப்பு (பீஎப்ஐ’எஸ்) | 41,199,066 | 14,357,434 | 61,884,000 |

| | | | |
|---|---|---|---|
| சமூகப் பொறுப்பு நிதியம் | - | - | 2,000,000 |
| | ---------- | ------------ | -------------- |
| மொத்தம் | 503,736,264 | 438,581,155 | 1,759,899,896 |
| | ======== | ======== | ========= |

## 4.2 கட்டுநிதி நிதியக் கணக்கு

நிகழ்ச்சித்திட்டத்தினால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் புத்தகங்கள் மற்றும் பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான கட்டுநிதி நிதியக் கணக்கின் செயற்பாடுகள் கீழே தரப்படுகின்றன.

| | யூஎஸ் டொலர் | ரூபா |
|---|---|---|
| 2013 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி | 7,096 | 902,411 |
| கூட்டு :- | | |
| மீள்நிரப்பல்கள் | 3,720,153 | 480,084,531 |
| வெளிநாட்டு நாணயமாற்று இலாபம் | - | 1,813,495 |
| | ------------------ | ------------------- |
| | 3,727,249 | 482,800,437 |
| கழி :- | | |
| பற்றுதல்கள் | 3,157,735 | 408,334,713 |
| | ---------------- | ------------------- |
| 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 569,514 | 74,465,724 |
| | ======= | ======== |

## 5. கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

தேயிலை சிறு நிலவுடைமையாளர் அபிவிருத்தி அதிகாரசபையின் (ரீஎஸ்எச்டீஏ) நுவரெலியாக் கிளையின் ரூபா 25,076,966 தொகை தேயிலை சிறு நில உரிமையாளர்களுக்கு உதவியாக மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தமை நிகழ்ச்சித்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில்

காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் தேயிலை சிறு நிலவுடைமையாளர் அபிவிருத்தி அதிகாரசபையின் கணக்குகளின் பிரகாரம் அந்த அளவு ரூபா 25,302,159 ஆனமையால் ரூபா 225,193 ஆன வேறுபாட்டைக் காணக்கூடியதாக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| விடயம் | சிறு நில உடைமையாளர் பெருந்தோட்டங்கள் தொழில்முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கணக்குகளின் பிரகாரம் மீதி | தேயிலை சிறு நிலவுடைமையாளர் அபிவிருத்தி அதிகாரசபையின் கணக்குகளின் பிரகாரம் மீதி | வேறுபாடு |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| வீபீ தேயிலை நாற்று | 6,134,490 | 3,255,923 | (2,878,567) |
| நாற்றுக்களின் போக்குவரத்து | 352,925 | 367,429 | 14,504 |
| மானியம் | 17,525,494 | 20,607,706 | 3,082,212 |
| உரம் | 203,750 | 203,750 | - |
| விவசாயிகளுக்கான பயிற்சி | 142,193 | 127,984 | (14,209) |
| சேவை வழங்குனர் | 718,114 | 739,367 | 21,253 |
| | 25,076,966 | 25,302,159 | 225,193 |

## 5.2 கொடுப்பனவுகளிலுள்ள குறைபாடுகள்

(அ) மொனராகலை உப நிகழ்ச்சித்திட்டத்திற்காக 06 உறுதிப்படுத்தப்படாத உறுதிச்சீட்டுக்களின் மூலம் ரூபா 7,668,412 பெறுமதியான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) மொனராகலை உப நிகழ்ச்சித்திட்டத்தில் ரூபா 515,275 பெறுமதியான நான்கு உறுதிச்சீட்டுக்ளில் கொடுப்பனவு செய்யப்பட்டவர்களிடமிருந்து பெறப்பட்டமைக்கான உறுதிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

காணப்பட்ட கொள்வனவு நடைமுறைகளை மீறியமையின் காரணமாக மத்திய நாட்டு உப நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மழை பாதுகாப்பு வலை நிர்மாணிப்பதற்காக கல்வனைஸ் செய்யப்பட்ட இரும்பு குழாய்களைக் கொள்வனவு செய்வதற்கு செலவிடப்பட்ட ரூபா 1,135,713 தொகையான செலவினம், விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்தினால் மீளளிப்புச் செய்வதற்கு இணங்கப்பட்டிருக்கவில்லை. இந்த செலவினங்களை பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்கான நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்பில் சாட்டுதல் செய்யப்பட்டிருந்தது.

## 5.4 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) துணைநிலை பயிர்ச் செய்கைக்காக கொகோவா நாற்றுக்களை பகிர்ந்தளித்தல்

மொனராகலை உப நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் இறப்பர் பயிர்ச் செய்கைக்கு மேலதிகமாக துணைநிலை பயிர்ச் செய்கையாக கொகோவா பயிர்ச் செய்கையை ஊக்குவிக்கும் நோக்கத்தில் விவசாயிகளுக்கிடையே கொகோவா நாற்றுக்களைப் பகிர்ந்தளிக்கும் நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்தது. பயிர்ச் செய்கைக்காலம் கடந்ததன் பின்னர் நாற்றுக்கள் பகிர்ந்தளிக்கப்பட்டமையின் காரணமாக பயிர்ச்செய்கை அழிவடைந்தமையும், பல விவசாயிகளுக்கு இறப்பர் பயிரிடப்பட்டு 03 வருட காலம் கடப்பதற்கு முன்னர் நாற்றுக்கள் பகிர்ந்தளிக்கப்பட்டமையினால் பயிர்ச்செய்கைக்குத் தேவையான இறப்பர் மர நிழல் அதிகரித்தமையினால் நிகழச்சித்திட்டம் வெற்றியடையாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

## (ஆ) நலனாளிகளுக்கிடையே பகிர்ந்தளிப்பதற்காக இறப்பர் நாற்றுக்களைக் கொள்வனவு செய்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மொனராகலை உப நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் நலனாளிகளுக்கிடையே பகிர்ந்தளிப்பதற்காக எலிபன்கமுவ நாற்றுமேடை உள்ளடங்கலாக பல தனியார் நாற்றுமேடைகளிலிருந்து 253,921 இறப்பர் நாற்றுக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. களப்பரிசோதனையின் பிரகாரம் எலிபன்கமுவ நாற்றுமேடையின் மூலம் இறப்பர் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு ஒரு இறப்பர் நாற்று ரூபா 60 படி விற்பனை செய்யப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது. எனினும் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் அதற்குச் சமமான ஒரு இறப்பர் நாற்று ரூபா 85 படி கொள்வனவு செய்யப்பட்டமையினால் ஒரு இறப்பர் நாற்றுக்காக ரூபா 25 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்ததுடன் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் மேலதிகமாகச் செய்யப்பட்ட மொத்தத்தொகை ரூபா 6,348,025 ஆக இருந்தது.

(ii) ஒரு இறப்பர் நாற்றை கொண்டு செல்வதற்காக உள்ள தூரத்தின் பிரகாரம் அதற்காக ரூபா 18 இற்கும் ரூபா 20 இற்குமிடையே செலுத்துவதற்கு இணங்கப்பட்டிருந்த போதிலும் மேற்கூறப்பட்ட இணங்கப்பட்ட தொகைக்கு மேலதிகமாக ரூபா 2,819,671 தொகை போக்குவரத்திற்காகச் செலுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒரு இறப்பர் நாற்றின் சராசரி விலை அண்ணளவாக ரூபா 104 ஆக இருந்தது.

(iii) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட பகிர்ந்தளித்தல் பட்டியல்களின் பிரகாரம் நலனாளிகளுக்கிடையே 253,921 இறப்பர் நாற்றுகள் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. எனினும், அடையாள அட்டை, முகவரி, பெற்றவர்களின் கையொப்பம், பகிர்ந்தளித்த உத்தியோகத்தரின் கையொப்பம் இன்மையினாலும் ஒரு நபரே மற்றைய நபர்களின் பெயருக்கு முன்னால் கையொப்பம் இட்டிருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டமை போன்ற விடயங்களின் காரணமாக இந்த நாற்றுக்களுக்குரிய நலனாளிகளுக்கிடையே

உரிய பிரகாரம் பகிர்ந்தளிக்கப்பட்டமை உறுதிப்படுத்தப்படவில்லை.

## 5.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) கணனிகளின் கொள்வனவு

மொனராகலை உப நிகழ்ச்சித்திட்டத்தின் பாவனைக்காக ஐக்கிய அமெரிக்காவில் உற்பத்தி செய்யப்பட்ட விரைவான தரவு நிரற்படுத்தலின் 2.3 ஜீஎச்இஸெட் உடைய டெல் வகையைச் சேர்ந்த 2 மடி கணனிகள் ஒன்று ரூபா 120,250 படி கொள்வனவு செய்வதற்கு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு சிபார்சு செய்திருந்தது. எனினும் மக்கள் சீனக் குடியரசில் உற்பத்தி செய்யப்பட்ட விரைவான தரவு நிரற்படுத்தலின் 1.6 ஜீஎச்இஸெட் உடைய டெல் வகையைச் சேர்ந்த 02 கணனிகள் அதே விலையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இதே வகையைச் சேர்ந்த கணனியொன்று திறந்த சந்தையில் ரூபா 65,000 ஆனமையால் இக் கொள்வனவிற்காக ரூபா 102,500 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டது.

### (ஆ) துணைநிலை பயிர்ச் செய்கைக்காக சோள விதை கொள்வனவு

(i) மொனராகலை உப நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் மொத்தக் கிரயம் ரூபா 3,489,420 தொகையான 933 கலப்பின சோளவிதை பக்கற்றுக்கள் ஒரு பக்கற்று ரூபா 3,740 படி 2013 ஒக்தோபர் மாதத்தின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் இதை நாற்று விதைகள் தம்பகல்ல கமநலசேவை நிலையத்தினால் ஒரு பக்கற்று ரூபா 3,650 படி அதே கம்பனியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தமை களப்பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது. இதன் பிரகாரம் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் ஒரு பக்கற்றுக்கு ரூபா 90 படி ரூபா 83,970 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ii) ரூபா 374,000 பெறுமதியான 100 விதைப் பக்கற்றுக்கள் விவசாயிகளுக்கிடையே பகிர்ந்தளித்ததற்குரிய ஆவண சான்றுகள் அலுவலகத்தில் காணப்படவில்லை. நாற்றுவிதை முளைக்கும் சதவீதம் மற்றும் பயிர்ச் செய்கையின் விளைச்சல் தொடர்பான பரிசோதனையின்றி வழங்குனரின் செயலாற்றல் பிணை விநியோகிக்கப்பட்டிருந்தது.

## 5.6 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் விடயங்களுக்கு எதிராகக் காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத எழுத்துமூல சான்றுகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | நலனாளிகளின் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்திற்காக கைத்தொழில் அபிவிருத்திச் சபைக்கு மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் | 776,142 | பங்குபற்றுனர்களின் வரவுக்குறிப்பு மற்றும் செலவினங்களை ஆதாரப்படுத்தும் பற்றுச்சீட்டுக்கள் |
| (ஆ) | தோரகல குளத்தின் புனரமைப்பிற்காக இலங்கை மகாவலி அபிவிருத்தி அதிகாரசபைக்கு மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் | 193,434 | அளவீட்டுப்பத்திரங்கள், வேலைப்பூர்த்தியாக்கல் சான்றுகள் மற்றும் செலவினங்களை உறுதிப்படுத்தும் பற்றுச்சீட்டுக்கள் |

## 5.7 பயனற்ற செலவினம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முறையான தொழில்நுட்ப மதிப்பீடு மேற்கொள்ளப்படாமல் மத்திய நாட்டு உப நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் ரூபா 490,000 தொகையில் யோகட் கப் முத்திரையிடும் இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டு ஆட்டுப்பாலிருந்து யோகட் உற்பத்தி செய்வதற்காக 2013 யூன் 26 ஆந் திகதி நலனாளியொருவருக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் முழுமையாக

தானியங்கி இயங்கும் இயந்திரத்திற்குப் பதிலாக அரை சுயமாக இயங்கும் வழங்கப்பட்டிருந்தது. அதனால் மேலதிக கூலிக் கிரயத்தைச் செய்ய வேண்டியேற்பட்டமையினால் நலனாளிகளினால் உற்பத்திச் செயற்பாடுகள் 2014 ஆகஸ்ட் 10 ஆந் திகதி வரையும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 1,103,220 கிரயமான பாரிய இயலளவையுடைய மிளகு உலர்த்தும் இயந்திரமொன்று மிளகு சீராக விளைச்சலின்றிக் காணப்படுகின்ற அரனாயக்க-அசுபினிஎல்ல பிரதேசத்தில் மிளகை உலர்த்துவதற்காக நலனாளியொருவரின் வீட்டில் 2013 ஆகஸ்ட் 01 ஆந் திகதி பொருத்தப்பட்டிருந்தது. இயந்திரத்தைச் செயற்படுத்துவதற்குத் தேவையான எரிபொருள் கிரயம் அல்லது ஈடுசெய்து கொள்வதற்குத் தேவையான போதியளவான மூலப்பொருள் பெறமுடியாமையினால் இயந்திரம் 2014 ஆகஸ்ட் 10 ஆந் திகதி வரையும் செயற்பாடற்றுக் காணப்பட்டது.

## 6. செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிகழ்ச்சித்திட்டத்தின் அதன் செயற்பாடுகள் 2007 நவம்பர் 06 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2014 நவம்பர் 06 ஆந் திகதி பூர்த்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. 2013 திசெம்பர் 31 ஆந் திகதி திருத்திய மொத்தக் கிரய மதிப்பீடு ரூபா 3,119,780,000 ஆக இருந்ததுடன் விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்தில் திருத்திய கிரய மதிப்பீடான ரூபா 2,697,563,000 தொகையில் 44.4 சதவீதம் மற்றும் இலங்கைக் குடியரசின் (ஜீஓஎஸ்எஸ்) மதிப்பீடு செய்யப்பட்ட பங்களிப்பு ரூபா 292,225,000 தொகையிலிருந்து 59.1 சதவீதம் என்பன மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயற்திட்டமானது மத்திய நாட்டு உப வேலைத்திட்டத்தின் மூலம் 183 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை மீளாய்வாண்டின் போது நடாத்துவதற்கு ரூபா 8,475,000 மதிப்பீட்டில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் இறுதி வரையிலும் 44 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் அதாவது 24 சதவீதம் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மதிப்பீட்டுத்

தொகையிலிருந்து ரூபா 4,624,000 தொகை அதாவது 54 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருந்தது.